# காக்கைப் பாடினியார் நச்செள்ளையார் பாடல்களில் சொற்கூறுகள்

12

**முனைவர் ஏ.மேரி நேசபிரியம்,**
**உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,**
**சென்னைக் கிறித்தவக் கல்லூரி, தாம்பரம்-59, தமிழ்நாடு, இந்தியா.**

**ஆய்வுச் சுருக்கம் :**

காக்கை பாடினியார் நச்செள்ளையாரின் மொழிநடைப் பண்பு ஆராயப்படுகிறது. மொழிக்கே உரிய பொதுவான மற்றும் தனித்த நடைக் குறித்து காக்கை பாடினியரின் பாடல்கள் ஆய்வுக்கு உட்படுத்தப்படுகிறது. முதன்மைச் சொற்களாக கருதப்படும் பெயர் , வினைகளைத் தொடர்ந்து பெயரெச்சம், பெயரடை, வினையெச்சம்,வினைமுற்று, ஆகிய சொற்கள் அவர் பாடல்களில் ஆளப்பட்டுள்ளதை அறிய முடிகிறது. வினைமுற்று விகுதிகளில் இவரின் தனித்த மொழிநடைப் பங்கு இடம்பெறுகின்றது. "அள்" ஈற்று வினைமுற்று விகுதிகளும் அசைச் சொற்களைக் கொண்ட வினைமுற்றுகளும் இவரின் பாடல்களில் தனித்த மொழிநடைப் போக்காக அமையப்பெறுகின்றது. மதி, இசின், தில் போன்ற அசைச் சொற்களுடன் வினைமுற்றுகள் இடம்பெறுகின்றன. காக்கைப் பாடினியார் நச்செள்ளையார் பாடல்களில் சொற்கள் இடம்பெறும் முறையகனை விளக்க இக்கட்டுரை முற்படுகிறது .

**திறவுச்சொற்கள் :** பெயரெஞ்சுக் கிளவி, காலக் கிளவி, அசைநிலை மெய்ம்மயக்கம், கூட்டுச்சொற்கள், வாய்பாடு, எஃகு.

**முன்னுரை:**

சங்க இலக்கியப் புலவரான காக்கைப் பாடினியார் நச்செள்ளையார் பன்னிரெண்டு பாடல்களைப் பாடியுள்ளார்.பதிற்றுப்பத்து ஆறாம் பத்தில் பத்து பாடல்களும் புறநானூற்றில் ஒரு படாலும் (278) குறுந்தொகையில் ஒரு பாடலும் (210) அகம் புறம் என்று இருதுறைகளிலும் இவர் பாடியுள்ளார். காக்கை பாடினியாரின் பாடல்கள் வாயிலாக, அவரின் தனித்த மொழிநடைப் போக்கினை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

**காக்கை பாடினியார் நச்செள்ளையார் :**

நச்செள்ளையார் என்பது இவரின் இயற்பெயராகக் கருதப்படுகிறது நச்செள்ளை என்று பலர் இருந்தமையால் காக்கையைப் பாடிய காரணத்தினால் காக்கை பாடினியார் நச்செள்ளையார் என்று அழைக்கப்படுகிறார். குறுந்தொகைப் பாடலில் ‘விருந்து வரக் கரைந்த காக்கையது பலியே’ என்று பாடியுள்ளதால் இவரை காக்கை பாடினியார் என்று அழைக்கின்றனர். காக்கைக்கு உணவிடும் வழக்கம் சங்க காலம் முதலே இருந்துள்ளது என்பதற்கு இப்பாடல் சான்றாகும். காக்கைக்கு வைக்கப்படும் சோற்றை ‘பலி’ என குறிப்பிடுகின்றனர் காக்கை கத்தும் ஒலியை கரைதல் என்று பாடல் கருதுகின்றது. இவர் தொண்டி என்ற ஊரை பாடியதால் பாண்டிய நாட்டை சேர்ந்தவர்களாக இருக்கலாம் எனக் கூறுகிறார் பதிற்றுப்பத்து ஆறாம் பத்தை ஆடுகோட்பாட்டுச் சேரலாதனைப் பாடியதால் சேர நாட்டை சர்ந்தவர் என்ற கருத்தும் நிலவுகின்றது பதிற்றுப்பத்து பதிகம் இவரை

அடங்கிய கொள்கை காக்கை பாடினியார் என்று குறிப்பிடுகின்றது.இதன் காரணமாக சான்றாண்மைத் தன்மை வாய்ந்தவரக இப்புலவர் அறியப்பெறுகிறார்.

காக்கை பாடினியார் நச்செள்ளையார் கையாண்டுள்ள சொற்கூறுகள் இங்கு விவரித்து எடுத்துக்காட்டப்படுகின்றன.

**பெயர்ச்சொல்:**

பெயர்ச்சொல் வேற்றுமை உருபுகளையும் பெயரடைகளையும் ஒன்றி வரும் எழுவாயாகத் தோன்றும் சொற்களைப் பெயர் என்று கருதுகிறோம் எழுவாயகத் தோன்றுக் கூடிய பெயர்ச்சொற்கள். அனைத்து இலக்கியப் மொழிகளில் காணப்படும். நச்செள்ளையாரும் இத்தகைய எழுவாய் அமைப்பினைத் தம் பாடல்களில் கையாண்டுள்ளாதை அறியமுடிகிறது.

கொடி பதி: 52:1

ஆன்றோள் பதி: 55:1

பகல் பதி: 59:1

கொலை பதி: 60:1

**விளிப்பெயர் :**

படரக்கையோரை தம்முகமாக அழைப்பதை விளி என்கிறோம். கற்பினால் சிறந்தவளின் தலைவனே! கொல்லுகின்ற போரைச் செய்யும் அரசே! உண்மையாக மொழியையுடைய புகழ் மிக்க தலைவனே! நல்ல நாட்டுக்கு உரிய ஒப்பற்றவனே! என்று மன்னனை விளித்து போற்றக் கூடிய விளிச்சொற்கள் ஆளப்பட்டுள்ளதை அறிய முடிகிறது.

கவண! 55 - 1

பொருந! 55 - 6

கோவே! 55 - 9

பெரும! 55 - 16

**சுட்டுப்பெயர்:**

சுட்டுச்சொற்களுள் பெயராக வருபவற்றைச் சுட்டு பெயர் என்று குறிப்பிடுகின்றோம் அவன்,இவன் எனவும் அவள்,இவள் எனவும் அவர்,இவர் எனவும் அது.இது எனவும் அவை,இவை எனவும் வருவன சுட்டுப் பெயர்களாகும் .

அது 52:25

இவண் 54:10

அவன் 56:3

**வினாப் பெயர்:**

வினா அடிகளாக உருவாகும் பெயர்களை வினாப்பெயர்கள் என்று குறிப்பிடுகிறோம். தமிழில் யா,ஆ,எ,ஏ போன்றவைகள் காணப்படுகின்றன.

யாரையோ? எனப் பெயர்வோள் கையதை பதி 52:24

எயில் முகப்படுத்தல் யாவது? பதி- 53:13 .

**பெயரெச்சம் :**

. பெயரினை எஞ்சு கிளவியாக உடைய எச்சம் பெயரெச்சம் ஆகும். இதனைத் தொல்காப்பியர் பெயரெஞ்சு கிளவி என்ற கலைச்சொல்லால் குறிப்பிடுகிறார் இறந்த காலப் பெயரெச்சமும் செய்யும் எனும் வாய்பாட்டு நிகழ்காலப் பெயரெச்சமும் காக்கை பாடினியார் பாடல்களில் அதிகம் பயின்று வருவதைக் காணமுடிகிறது .

சுழந்த 51-4 ,ஆடிய 51-7,மணந்த 51-15 , கடந்த 52-10 ,உருத்த 52-25 ,யாத்த 53-4 , சேர்ந்த 55-15 , தணிந்த 55-15 , தகைத்த 55-20 ,வந்த 56-6 , பயந்த 52-10, அடங்கிய 57-11 , தேன்றிய 57-12 , துனித்த 57 -14 , பொறித்த 58- 3 , அமைந்த 60-6

"செய்யும் " என்னும் வாய்ப்பாட்டு நிகழ்காலப் பெயரெச்சம்:

முழங்கும் 51-2 சேக்கும் 51-5 ஆடும் 51-10 விலங்கும் 51-12 வழங்கும் 51-13 ஞரலும் 51-14 தவழும் 51-25 தபுக்கும் 51 -26 துடிக்கும் 51-29 நிவக்கும் 51-3 கடுக்கும் 52 - 19 தூங்கும் 53-6 இரங்கும் 55-3 துஞ்சும் 55-4 நல்கும் 55-11 அஞ்சும் 57-14 படறும் 59-3 பகுக்கும் 59-16

மேற்குறிப்படுள்ள முழங்கும் என்ற சொல் பெரிய அலைகள் இடியோசைப் போல முழங்குகின்ற கடலை சேர்ந்த என்று நிகழ்கால பெயரெச்சத்தை உணர்த்தி நிற்கின்றன. மேலும் ஆடுகின்றன விலகி நின்று அசைகின்ற படருகின்ற என்று செய்யும் என்னும் வாய்பாட்டினை தம் மொழிநடையில் காக்கைப்பாடினியார் கையாண்டுள்ளார்.

**பெயரடை:**

பெயருக்கு அடையாக வருபவை பெயரடையாகும். தெரிநிலை பெயரெச்சமும் குறிப்பு பெயரெச்சமும் சில உரிசொற்கலும் பெயர்கள் அடையாக வருகின்றன. பண்புப்பெயரடை எண்ணுப்பெயரடை அளவுப் பெயரடைகளை தம் மொழியில் கையாண்டுள்ள போக்கு காணப்படுகின்றது.

பண்புப் பெயரடை:

செந்நா , செவ் ஊன் , வெண்மழை , வெண்தொடு

எண்ணுப் பெயரடை:

ஈர் இதழ், இருநிலம், இருவிசும்பு, எண்ணிக்கையில் குறிப்பிடும் சொற்களை பயன்படுத்துவதற்கு எண்ணுப் பெயரடைகளைப் பயன்படுத்தியுள்ளார். மேலும் கடுஞ்சினம் ,பெருஞ்சினம், சிறு செங்குவளை, இளந்துணை, நல்லிசை போன்ற பெயரடைகளை தனக்கென தனித்த மொழிக்கூறுகளாகக் கையாண்டுள்ளார்.

**வினைச் சொல்:**

வேற்றுமை உருபுகளை ஏற்காததாய் காலக்கிளவிகளை ஏற்பதாய் வரும் சொற்கள் வினைச்சொல் எனப்படும். வினைச் சொற்கள் மொழியின் முதன்மை சொற்களாகக் கருதப்படுகின்றன. வினைச்சொல் ஒரு பொருளின் வினையை(செயலை) உணர்த்தப்படுவதற்கு பயன்படுத்தபடுகிறது. அனைத்து மொழிகளுக்கும் வினைச்சொல் இன்றியமையாத உறுப்பாகத் திகழ்கிறது. வினைச் சொல்லின் முக்கியத்துவத்தை நச்செள்ளையாரும் தம் பாடல்களில் பயன்படுத்தியுள்ளார்.

சேர் 51-3,

குவி 51-5, கொல் 52-1, அவிழ் 52-19, கிளர் 52-30, பாய் 53-17, மருள் 54-3, அடு 55-2,படு 54 -13, கவர் 57-8,புணர் 57-9, சொல் 58-4, ஊழ் 58-4, எரி 58-10, பாடு 59-18, விளை 60-6#

**வினையெச்சம்:**

வினைச்சொல்லைக் கொண்டு முடிகின்ற எச்சச் சொல் வினையெச்சம் எனப்படுகிறது. வினையெச்சம் இருதிணை ஐம்பால் மூவிடங்களுக்கும் பொதுவாக அமையும் தன்மை உடையது

**செய்து செய்யூச் செய்தென**
**செய்யியர் செய்யிய செயின் செய செயற்கு என**
**அவ் வகை ஒன்பதும் வினை எஞ்சு கிளவி**

**(தொல். சொல் 713 நூற்பா)**

தொல்காப்பிர் குறிப்பிடும் வினையெச்ச வாய்பாடுகளில் சில இப்பாடல்களில் விரவி வருகின்றன .

செயின் செய்யியர் செய்யூ வாய்ப்பாடு வினையெச்சங்கள் இடம்பெறுவதை அறிய முடிகிறது.

செயின் -காணின்

செய்யியர் -காணியர்

செய்யூ -காணுஉ

**வினைத்தொகை:**

வினைத்தொகை என்பது ஒரு வினைச்சொல்லும் ஒரு பெயர்ச்சொல்லும் இணைந்த கூட்டுச்சொற்களாகும். முதல் சொல் வினைச்சொல்லாகவும் இரண்டாம் சொல் பெயர்ச்சொல்லாகவும் இடம்பெறும் தன்மையுடையது. முன்வரும் வினைச்சொல் மூன்று காலத்தையும் குறிப்பால் உணர்த்தும் சொல்லாக அமையும் பண்புடையது.

அடைகரை- பதி 51:7

உயர்நிலை- பதி 54:9

**வினைமுற்று:**

தொடர்பொருள் முற்றி நிற்கின்ற வினையினை வினைமுற்று என்று குறிப்பிடுகிறோம். இந்த வினைமுற்று தெரிநிலை வினைமுற்று குறிப்பு வினைமுற்று என இருவகைப்படும்.

இயலினள் பதி 51:10,ஒள்கினள் பதி 51:10,உடன்றனள் 52:16, நடுங்குவனள் 52:21, என்று "அள்" ஈற்று விகுதிகளைப் பெற்று பெண்பாலைக் குறித்து வினைமுற்றுகள் இடம்பெற்றுள்ளன. இதில் இயலினள், ஒள்கினள் அடுக்கு வினைமுற்றுகளாக இடம்பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

அசைநிலைகளைப் பெற்றுவரும் வினைமுற்றுகள் :

மதி, இசின், தில் போன்றவைகள் அசைநிலைகளாகக் குறிப்பிடப்படுகின்றன. நச்செள்ளையாரின் மொழிநடையில் இத்தகைய அசைநிலைகள் இடம்பெற்றுள்ளன என்பதை அறிய முடிகிறது.

ஆகுமதி- பதி53:3

சென்மதி- பதி53:14

வந்திசின்- பதி 54:1

செல்லாமோதில்- பதி 57:6

ஆகன்மார் பதி 54:9, செய்மார் பதி 54:14, என்ப பதி 58:12, தகுப - பதி 59:12, ஆயினை, நல்கினை போன்ற வினைமுற்று வடிவங்களும் பயின்றுவந்துள்ளன. மெய்ம்மயக்க வினைமுற்றினை ஒரே ஒரு இடத்தில் மட்டுமே பயன்படுத்தியுள்ளார் இரு மெய்கள் இணைந்து வருவது மெய்ம்மயக்கம். இந்த மெய்ம்மயக்கம் வினைமுற்று வடிவில் இடம்பெறுகின்றன.

போன்ம் பதி 51:23

**ஆய்த எழுத்துக்கள் இடம்பெறல்:**

எகரத்தை ஊர்ந்த ஆய்த எழுத்துக்கள் நள்செள்ளையார் பாடல்களில் இடம்பெறுவது குறிப்பிடத்தக்கதாகும்.

எஃகுடை – பதி 51:30

எஃகு - பதி 52:6

எஃகு என்னும் சொல்லை இரண்டு இடங்களில் கையாண்டுள்ளனர் எஃகு என்பது வாள் என்ற பொருளை உணர்த்தி வருகின்றது . யானையினது பூண் அணிந்த கொம்பை வெட்டும் வாளையுடைய வெற்றி கொண்ட படையில் வாழும் வீரர் என்று பொருள்படுகின்றது. எஃகு வெட்டும் வாள் என்று குறிப்பிடப்படுகிறது.

**முடிவுரை :**

காக்கைப் பாடினியார் நச்செள்ளையார் பாடல்களில் பொதுவான மொழிநடைப் பண்பும் தனித்த மொழிநடைப் போக்கினையும் அறிய முடிகிறது. பொதுவான பண்பு என்று குறிப்பிடும் போது பெயர், வினை, பெயரெச்சம், வினையெச்சம், வினைத்தொகை, ஆகிய சொற்கூறுகள் பொது மொழிநடைப் பண்பாக அமைந்துள்ளன. உயர்திணை பெண்பால் வினைமுற்று விகுதிகளில் "அள்" ஈற்று வினைமுற்று விகுதிகளை இவர் தம் பாடல்களில் மிகுதியாக கையாண்டுள்ளதை அறிய முடிகிறது. இயலினள், ஒள்கினள், உடன்றனள், நடுங்குவனள் போன்ற வினைமுற்று சொற்களில் "அள்" ஈற்று விகுதிகள் பயன்படுத்தப்படுள்ளமை காக்கைப் பாடினியாரின் தனித்த மொழிநடைப் பண்பினை எடுத்துக்காட்டுகிறது.

**துணைநூற் பட்டியல்**

1. பதிற்றுப்பத்து (2014) (மூலமும் உரையும்) நியூ செஞ்சரி புக் ஹவுஸ், இராயப்பேட்டை சென்னை.
2. முனைவர் சுபாஷ் சந்திரபோஸ் (2015) (உ.ஆ) தொல்காப்பியம்-சொல்லதிகாரம், இயல் வெளியீடு, தஞ்சாவூர்.
3. தமிழண்ணல் (2014) மீனாட்சி பதிப்பகம் மதுரை.
4. செ.வை.சண்முகம் (2002) கவிதைக் கட்டமைப்பு, மெய்யப்பன் பதிப்பகம், 31 சிங்கர் தெரு பாரிமுனை சென்னை.
5. முனைவர் ப. டேவிட் பிரபாகர் (2004) தமிழ் மொழி அறிமுகம், விவி வெளியீடு, 319, ஔவையார் தெரு, இராசக்கீழ்பாக்கம், சென்னை.
6. முனைவர் மு.வரதராசன் (2017) மொழிவரலாறு, பாரிநிலையம் , பாரிமுனை, சென்னை.
7. மோ. இசரேயேல் (1976) இடையும் உரியும், மதுரைப் பல்கலைக்கழகம், மதுரை